10.12.2024 வா.சா.2 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் முதல் விசாரணை. (ஒ.எஸ்.எண். 68/2022 )திரு.கார்த்தீஸ்வரன்.

<u>2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

1) 1ம்பிரதிவாதி மீனாட்சி இறந்துபோன ரத்தினத்தின் முதல் மனைவி என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி மீனாட்சிக்கும், ரத்தினத்திற்கும் இடையே நடைபெற்ற திருமணம் சட்டப்படி விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான். 1ம்பிரதிவாதிக்கும், ரத்தினத்திற்கும் குழந்தைகள் எத்தனை பேர்கள் என்றால் மீனாட்சியம்மாளுக்கு குழந்தைகள் இல்லை. ரத்தினத்திற்கு பெற்றோர் உயிருடன் இருக்கிறார்களா என்றால் அவர்கள் உயிருடன் இல்லை. நான் குடியிருப்பது சிவகாசி தாலுகா விருதுநகர் மாவட்டம் என்றால் சரிதான். வழக்கின் வாதிகள் கோவில்பட்டி தாலுகாவில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதிகளுக்கும், எனக்கும் என்ன உறவு என்று நிருபண வாக்குமூலத்தில் தெளிவாக சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளை எப்படி எனக்கு தெரியும் என்ற விவரத்தையும் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எனது பக்கத்தில் 6 வருடங்கள் குடியிருந்ததால் எனக்கு தெரியும். என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் வழக்கின் வாதிகள். உள்ளூர் நபர்களை சாட்சியம் அளிக்க அழைக்காமல் என்னை சாட்சியம் அழைக்க அழைத்தது குறித்து கேட்டேனா என்றால் இல்லை. பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் என்னை அழைத்தார்கள். வாதி குடும்பத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டுதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
10.12.2024